

பாடம் 6 மே 4–10

# இரண்டு சாட்சிகள்

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** வெளி 11:3–6; ஆதி 4:14; வெளி 12:5,6,14,15; 7:25; ஏசா 54:17; சங் 119:89; வெளி 11:15–18.

**மனன வசனம்:** புல் உலர்ந்து பூ உதிரும்; நமது தேவனுடைய வசனமோ என்றென்றைக்கும் நிற்கும். ஏசாயா 40:8.

நூற்றாண்டுகள் நெடுகிலும் தேவவார்த்தையை மக்கள் கூறுபோட்டு, சந்தேகித்து, புறக்கணித்து வந்துள்ளனர். துறவிமடங்களில் சங்கிலியால் கட்டிப்போட்டிருந்தனர்; பொதுச்சதுக்கங்களில் எரித்தனர்; துண்டுதுண்டாகக் கிழித்தனர். அதை நம்பினவர்களைப் பரியாசம்பண்ணி, ஏளனம்செய்து, சிறையில் அடைத்து, கொலை செய்தார்கள். அந்நேரங்களில் எல்லாம், தேவ வார்த்தை மேற்கொண்டது.

மத்தியக்காலச் சபை வேதாகமத்தை நம்புகிற மெய்க்கிறிஸ்தவர்களை உபத்திரவப்படுத்தியது. ஆனாலும், தேவவார்த்தை பிரகாசித்து, இருளைப் போக்கியது. தேவவார்த்தையை அறிவிப்பதை ஒடுக்குதலும் உபத்திரவமும் நிறுத்த முடியவில்லை. ஆங்கில வேதாகம மொழிபெயர்ப்பாளரான வில்லியம் டிண்டேல் தன் விசுவாசத்திற்காக விசாரிக்கப்பட்ட சமயத்தில், தேவவார்த்தையைப் பரப்புவதில் யார் அதிகம் உதவினாரென அவரிடம் கேட்டார்கள். சற்று யோசித்தவர், 'டர்ஹாம் நகரப் பேராயர்' என்று சொன்னார். நீதிபதிகள் அதிர்ச்சியடைந்தனர்.

ஒரு சமயம், அவரது ஆங்கில மொழிபெயர்ப்பு வேதாகமங்கள் சிலவற்றை மொத்தமாக அந்தப் பேராயர் வாங்கி, பொதுவெளியில் எரித்தாராம். அதனால் சத்தியத்தின் நோக்கத்திற்கு தான் மிகப்பெரிய உதவி செய்ததை அந்தச் சமயத்தில் பேராயர் அறிந்திருக்கவில்லை. வழக்கத்தைவிட அதிக விலைகொடுத்து அவற்றை வாங்கியிருந்தார். எரிக்கப்பட்ட வேதாகமங்களைவிட அந்தக்கிரயத்தை வைத்து அதிக வேதாகமங்களை டிண்டேல் அச்சிட முடிந்தது. புழுதியில் புதைக்கப்பட்ட சத்தியம் மீண்டும் உதித்து, முழுப்பிரகாசத்தோடு பிரகாசித்தது.

இவ்வாரம், வேதவாக்கியங்கள்மீதும் கிறிஸ்தவ விசுவாசத்தின் மீதும் தொடுக்கப்பட்ட கொடிய தாக்குதல்களில் ஒன்றுபற்றி ஆராய்வோம். பிரெஞ்சுப் புரட்சியின்போது, பிரான்ஸின் தெருக்களில் இரத்த ஆறு ஓடியது. பாரிசின் பொதுச்சதுக்கத்தில் தலைவெட்டுப் பொறியை அமைத்தார்கள்; அதில் ஆயிரக்கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டார்கள். நாத்திகம் அரசுமதமாகியது. ஆனாலும், தேவவார்த்தையின் சாட்சியை அடக்கமுடியவில்லை.

***மாபெரும் போராட்டம், 12-17ம் அதிகாரங்களின் அடிப்படையில் எழுதப்பட்ட இந்த வாரப் பாடம் 2024, மே 4 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்.***

# இரண்டு சாட்சிகள்

**வெளி 11:3-6இல் இரண்டு சாட்சிகளை அடையாளங்காண உதவுகிற அம்சங் களைப் பட்டியலிடுங்கள்.**

சகரியா 4இல், பொன் குத்துவிளக்கின் வலப்புறம் ஒன்றும், இடப்புறம் ஒன்றுமாக இரு ஒலிவமரங்களை தீர்க்கதரிசி கண்டார்; அதே உருவகம்தான் வெளி11இல்வருகிறது. அவை 'சர்வலோகத்துக்கும் ஆண்டவராயிருக்கிறவரின் சமுகத்தில் நிற்கிற அபிஷேகம் பெற்றவர்கள்' என்று சகரியாவிடம் சொல்லப் பட்டது. சக 4:14. விளக்குத்தண்டு தொடர்ந்து எரியும்படியான எண்ணெயை ஒலிவமரங்கள் கொடுத்தன. இங்கே சங்கீதக்காரனின் வார்த்தைகளை நினைவு கூரவேண்டும்: 'உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது'. சங் 119:105. எண்ணெய் பரிசுத்த ஆவியைச் சுட்டிக் காட்டுகிறது. சக 4:2,6. உலகத்தைப் பிரகாசிக்கும்படி பரிசுத்த ஆவியின் வல்ல மையால் தேவ வார்த்தை பிரசங்கிக்கப்படுவதை வெளி 11இல் உள்ள யோவா னின் தரிசனம் விவரிக்கிறது.

இந்த இரண்டு சாட்சிகளும் தீர்க்கதரிசனம் சொல்லக்கூடியவை; அவை தீர்க்கதரிசனம் சொல்லிவருகிற நாட்களில் மழை பெய்யாதபடி வானத்தை அடைக்கமுடியும். தண்ணீரை இரத்தமாக மாற்றமுடியும்; பூமியை வாதைகளால் வாதிக்கமுடியும். இஸ்ரவேலில் மழைபெய்யாது என்று தேவ வார்த்தையின்படி எலியா சொன்னார்; அவரது ஜெபத்திற்குப்பதிலாக மூன்றரை வருடங்கள் மழை பெய்யவில்லை. யாக் 5:17. பிறகு, மழைபெய்யவைக்க பாகாலின் தீர்க்கதரிசி கள் எடுத்த முயற்சிகள் தோற்றன; ஆனால் எலியா தேவனிடம் ஜெபித்தபோது, மழை பெய்தது. 1இராஜா 17; 18. மோசே தேவ வார்த்தையின் மூலமாக, தண்ணீரை இரத்தமாக மாற்றுவது உட்பட சகலவித வாதைகளையும் எகிப்தியர்மேல் வரப் பண்ணினார்; ஏனென்றால் தேவ மக்களை விடுவிக்க பார்வோன் மறுத்துவந் தான். யாத் 7.

வேதவாக்கியங்களை அழிக்கநினைக்கிறவர்கள் அவற்றின் வாயிலிருந்து புறப்படுகிற அக்கினியால் அழிக்கப்படுவார்கள். 'நீங்கள் இந்த வார்த்தையைச் சொன்னபடியினால், இதோ, நான் உன் வாயிலிட்ட என் வார்த்தைகளை அக் கினியும், இந்த ஜனத்தை விறகும் ஆக்குவேன், அது இவர்களைப் பட்சிக்கும்' என்று தேவன் சொல்லுகிறார். எரே 5:14. தேவ வார்த்தையைப் புறக்கணிக்கிற அனைவர்மீதும் தேவன் நியாயத்தீர்ப்பை வழங்குகிறார். வாயிலுள்ள அக்கினி போல அவரது வார்த்தை இருக்கிறது.

பழைய ஏற்பாட்டு வேதவாக்கியங்கள் தம்மைக் குறித்துச் சாட்சிக்கொடுப் பதாக இயேசு சொல்லுகிறார். யோவான் 5:39. சுவிசேஷமானது உலகம் முழுவ திற்கும் 'சாட்சியாகப்' பிரசங்கிக்கப்படும் என்றும், பழைய ஏற்பாடோடு சேர்த்து புதிய ஏற்பாடும் அந்தச் சாட்சிக்கு அடிப்படையாக இருப்பதாகவும் இயேசு சொல்லுகிறார். மத் 24:14. சாட்சி என்பதற்கான வார்த்தையின் வேர்ச்சொல்லுக்கு இரத்தசாட்சி என்று அர்த்தம்; அந்தச் சொல்தான் வெளி 11:3இல் வருகிறது.

அந்த இரண்டு சாட்சிகள் யார்? இந்த வேதாகமக் கருத்துகளையும், வெளி 11 சொல்கிற தன்மைகளையும் வைத்துப் பார்த்தால், இரண்டு சாட்சிகளும் பழைய - புதிய ஏற்பாடுகள் என்பது தெளிவாகிறது; அவை தேவனுடைய வெளிச்சத் தையும் சத்தியத்தையும் உலகத்திற்குத் தெரிவிக்கின்றன.

---

**பல கிறிஸ்தவர்கள் இன்று பழைய ஏற்பாட்டைக் குறைத்து மதிப்பிடுகிறார்கள்; புதிய ஏற்பாடு இருப்பதால், பழைய ஏற்பாடு தேவையற்றது என்கிறார்கள். இந்த மனநிலை ஏன் மிகவும் தவறானது?**

# தீர்க்கதரிசனக் காலக்கட்டங்கள்

**வெளி 11:3; 12:5,6,14,15; தானி 7:25 சொல்கிற தீர்க்கதரிசனக் காலக்கட்டங்களில் என்ன ஒற்றுமைகளைக் காணமுடிகிறது?**

அந்த இரண்டு சாட்சிகளும், 'இரட்டு வஸ்திரமுடுத்திக்கொண்டிருக்கிறவர்களாய், ஆயிரத்திருநூற்றறுபது நாளளவும் தீர்க்கதரிசனஞ்சொல்லும்'. வெளி 11:3. இந்தக் காலக்கட்டமும் நாற்பத்திரண்டு மாதங்களும் ஒன்றே; அப்போது 'புறஜாதிகள்' (தேவனுடைய சத்தியத்தை எதிர்ப்பவர்கள்) பரிசுத்த நகரத்தை மிதிப்பார்கள். வெளி 11:2. தேவனுடைய எதிரிகள் 1260 நாட்கள் தேவனுடைய சத்தியத்தை மிதிப்பார்கள் (அதாவது, 42 X 30 = 1260) கடைசிக்காலம் சம்பந்தப்பட்ட தீர்க்கதரிசனத்தில் ஒருநாள் என்பது ஒரு வருடமாகும்); மேலும் இந்த நாற்பத்திரண்டு மாதங்களும் தேவனுடைய இரண்டு சாட்சிகளான பழைய ஏற்பாடும், புதிய ஏற்பாடும் அவர்களுக்கு எதிராகத் தீர்க்கதரிசனம் சொல்லும்.

நான்காம் பாடத்தில் பார்த்ததுபோல, ரோம சாம்ராஜ்யம் உடைந்தபிறகு எழும்பவிருந்த சின்னகொம்பானது 'ஒரு காலமும், காலங்களும் (இருமை; இரண்டு காலங்கள் என்று அர்த்தம்), அரைக்காலமும்' தேவமக்களை உபத்திரவப்படுத்தவிருந்ததாக தானி 7:25 சொல்லுகிறது. ஒரு 'காலம்' என்பது ஒரு வருடம் (360 நாட்கள்). எனவே, மூன்றரை காலங்கள் என்பது 1,260 நாட்கள்.

தேவமக்களுக்கு நேரிடவிருந்த 1260 நாட்கள் உபத்திரவம்பற்றி வெளி 12:6 பேசுகிறது. அதை காலம், காலங்கள், அரைக்காலம் என்று வெளி 12:14 சொல்கிறது. 42 மாதங்கள் என்று வெளி 13:5 சொல்கிறது. 42 மாதங்கள் என்றும், 1260 நாட்கள் என்றும் வெளி 11:2,3இல் வருகிறது. இந்தத் தீர்க்கதரிசனங்கள் அனைத்தும் ஒரே வரலாற்றுக் காலத்தின் வெவ்வேறு அம்சங்களைச் சுட்டிக்காட்டுகின்றன.

வேதாகமத்தின் அதிகாரம் புறக்கணிக்கப்படுகிறபோது, அதற்குப் பதிலாக வேறு (மனித) அதிகாரங்கள் எழும்புகின்றன. அதனால், தேவ வார்த்தையைக் கைக்கொள்ளுகிறவர்கள் ஒடுக்குதலுக்கு ஆளாகிற நிலை உண்டாகிறது; கி.பி. 538 முதல் கி.பி. 1798 வரை போப்பாதிக்கத்தில் அதுதான் நடந்தது; அப்போது மத்தியக் காலத் திருச்சபை மிகப்பயங்கர ஆவிக்குரிய இருளுக்குள் தள்ளப்பட்டது. தேவனுடைய கற்பனைகளுக்குப்பதிலாக மனிதர்களுடைய கட்டளைகளைப் புகுத்தினார்கள். எளிதாகப் புரிந்துகொள்ளக்கூடிய சுவிசேஷத்தை மனிதப் பாரம்பரியங்கள் மறைத்தன. ஐரோப்பா முழுவதும் தன் அதிகாரத்தைப் பரப்பும்படிக்கு சமயச்சார்பற்ற வல்லமையுடன் ரோமச்சபை கைகோர்த்தது.

இந்த 1260 ஆண்டுகளில், தேவனுடைய இரண்டு சாட்சிகளான அவரது வார்த்தை, இரட்டுடுத்திக் காணப்பட்டன. பாரம்பரியம், சடங்காச்சாரம் எனும் குவியலுக்குள் அவற்றின் சத்தியங்கள் மறைக்கப்பட்டன. இந்த இரண்டு சாட்சிகளும் இன்னமும் தீர்க்கதரிசனம் உரைத்தன; அதாவது, வேதாகமம் இன்னமும் பேசினது. இந்த ஆவிக்குரிய இருளுக்குமத்தியிலும், தேவவார்த்தை பாதுகாக்கப்பட்டது. அதைப் போற்றி, அதன் போதனைகளின்படி வாழ்ந்தவர்கள் இருந்தார்கள். ஆனால் ஐரோப்பாவின் மக்கள் தொகையுடன் ஒப்பிடுகையில், அந்த எண்ணிக்கை மிகவும் குறைவுதான். வால்தேனியர்கள், ஜான் ஹஸ், ஜெரோம், மார்டின் லூதர், உல்ரிச் ஸ்விங்ளி, ஜான் கேல்வின், ஜான் வெஸ்லி, சார்லஸ் வெஸ்லி போன்றவர்களும், வேறு பல சீர்திருத்தவாதிகளும் தாங்கள் புரிந்துகொண்டபடி தேவ வார்த்தைக்கு உண்மையாக இருந்தார்கள்.

---

**தேவ வார்த்தையின்படி அல்லாமல், பாரம்பரியத்தின்படி அமைந்த எந்தெந்தப் போதனைகளை பல கிறிஸ்தவர்கள் இன்றும் கடைப்பிடித்து வருகிறார்கள்?**

# கொல்லப்பட்ட இரண்டு சாட்சிகள்

**வெளி 11:7-8இல் அடையாள வார்த்தைகள் உள்ளன; அதன் அடிப்படையில், தேவனுடைய இரண்டு சாட்சிகளான பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் என்னவாகுமென வசனங்கள் முன்னுரைக்கின்றன?**

கி.பி. 538இல், அஞ்ஞான ரோம சாம்ராஜ்யம் வீழ்ந்தது. சமுதாய, அரசியல், மத அதிகாரத்தை போப் விஜிலஸிடம் கிழக்கு ரோமப் பேரரசரான ஜஸ்டினியன் ஒப்படைத்தார். மத்தியக்காலச் சபையின் நீண்டகால ஆதிக்கம் துவங்கியது. கி.பி. 1798 மட்டும் அது தொடர்ந்தது. பிரெஞ்சு தளபதியான பெர்தியர், 1798, பெப்ரவரி 10ஆம் தேதி, எந்த எதிர்ப்புமின்றி ரோமுக்குள் சென்றார். போப் ஆறாம் பையஸைச் சிறைப்படித்து, பிரான்ஸுக்குக் கொண்டு சென்றார்; அங்கே போப் மரித்தார். தானியேல் - வெளிப்படுத்தலில், ரோமச்சபையின் சமயச்சார்பற்ற அதிகாரம் முடிவடையுமென தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்ட 1260 நாட்கள் அல்லது வருடங்கள் அதோடு முடிந்தன. (நேற்றைய பாடத்தைப் பார்க்கவும்).

வேதாகம தீர்க்கதரிசனம் எவ்வளவு உண்மை என்பது மிகவும் வல்லமையாக வெளிப்படுகிறது! கிறிஸ்துவுக்கு 500 வருடங்களுக்குமுன் எழுதின தானியேல், 2300 வருடங்களுக்கு பிறகு நடக்கவிருந்த நிகழ்வுகளை மிகச்சரியாக முன்னுரைத்தார். வேதாமகமம் சொல்கிற தீர்க்கதரிசனங்களை நம்பலாம்.

அதேசமயம், இந்த நிகழ்வுகள் முழுவதிலும், சுவிசேஷத்தின் சத்தியத்தை தேவவார்த்தையின் சாட்சி பாதுகாத்தது. ஆனால் அதைவிட பெரிய சவால்கள் வேதாகம சத்தியத்தை அச்சுறுத்தின. பாதாளத்திலிருந்து எழும்பி வந்த மிருகம் (சாத்தான்), வேதவாக்கியங்களுக்கு எதிராகப் போர்த் தொடுத்தது. 1789இல் தொடங்கிய பிரெஞ்சு புரட்சியின்மூலமாக, வேதாகம அதிகாரத்தின்மீது புதிய தாக்குதல்களைத் தொடுத்தான்.

பிரெஞ்சுப் புரட்சியில், கிறிஸ்தவமார்க்கத்தை அகற்றும்படி பகுத்தறிவு மார்க்கம் என்கிற நாத்திக மார்க்கத்தை அரசாங்கம் ஏற்படுத்தியது. 1793, நவம்பர் 10இல், பகுத்தறிவு மார்க்கப் பண்டிகை நாடுமுழுவதும் கொண்டாடப்பட்டது. பிரான்ஸ்முழுவதிலும் இருந்த சபைகள் பகுத்தறிவு மார்க்கக் கோவில்களாக மாறின; பகுத்தறிவு மார்க்க தேவதை என்று சொல்லி, ஒரு பெண்ணை சிங்காசனத்தில் அமர்த்தினார்கள். வேதாகமங்களை தெருக்களில் எரித்தார்கள். தேவன் இல்லையென அறிவித்தார்கள்; மரணம் என்பது முடிவே இல்லாத தூக்கம் என்று சொன்னார்கள். தேவனுடைய இரண்டு சாட்சிகளைக் கொல்லுவதற்கு பக்தியற்ற மனிதர்கள்மூலம் சாத்தான் முயன்றான். அவர்களது செத்த சரீரங்கள் ‘மகா நகரத்தின் விசாலமான வீதியிலே கிடக்கும். அந்த நகரம் சோதோம் என்றும் எகிப்து என்றும் ஞானார்த்தமாய்ச் சொல்லப்படும்’. வெளி 11:8.

எகிப்தின் கலாச்சாரம், மெய்யான தேவனை மறுதலித்த, பல கடவுள்களை நம்பின கலாச்சாரமாகும். யாத் 5:2. சோதோம் கொடிய ஒழுக்கக்கேட்டிற்குப் பெயர்போனது. பிரெஞ்சுப் புரட்சியில், தேவனுடைய இரண்டு சாட்சிகளான பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் நாத்திகத்தாலும் ஒழுக்கச் சீர்கேட்டாலும் கொல்லப்பட்டன.

தேவனுடைய இரண்டு சாட்சிகளின் உடல்கள் ‘மூன்றரை நாள்’ அடக்கம் பண்ணப்படாமல் இருக்குமென வெளி 11:9 சொல்லுகிறது. அது தீர்க்கதரிசன ‘நாட்களின்படி’ மூன்றரை வருடங்கள். பிரஞ்சு புரட்சியின்போது குறைந்தபட்சம் மூன்றரை வருடங்கள் நாத்திகம் உச்சத்தில் இருந்தது. 1793, நவம்பர் 26இல், மெய்மார்க்கத்தை ஒழிக்கும்படி பாரிசில் ஒரு கட்டளை பிறந்தது; இந்தச் சட்டத்தை 1797, ஜூன் 17இல் அதே அரசாங்கம் அகற்றியபோது, இந்த மூன்றரை வருடக் காலம் முடிவுக்கு வந்தது.

# உயிர்த்தெழுந்த இரண்டு சாட்சிகள்

**தேவனுடைய வார்த்தைபற்றி வெளி 11:11 முன்னுரைப்பது என்ன?**

பிரெஞ்சுப்புரட்சியின்முடிவில், தேவவார்த்தைமீண்டும்உயிர்தெழுமெனச் சொல்லப்பட்டது. மிகப்பெரிய எழுப்புதல் நடைபெறவிருந்தது. அதனால், தேவ வார்த்தை மீண்டும் இரட்சிப்புக்கேதுவான ஜீவவல்லமையாக மாறுவதைப் பார்த்து மிகப்பெரிய கலக்கம் உண்டாகவிருந்தது. 18ம் நூற்றாண்டின் முடிவில், பூமியின் கடைசிபரியந்தமும் சுவிசேஷத்தைக் கொண்டு செல்கிறவர்களை தேவன் எழும்பச்செய்தார். வேதாகமச் செய்தியை வேகமாகப் பரப்பினார்கள்; உதாரணமாக வில்லியம் கேரி, இந்தியாவுக்குப் பயணப்பட்டு, பத்துக்கு மேற்பட்ட இந்தியப் பேச்சுமொழிகளில் வேதாகமத்தை மொழிபெயர்த்தார். வேதாகமத்தின் வல்லமையால் தூண்டப்பட்டு, உலகம் முழுவதிலும் நற்செய்தியாளர்கள் அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

பிரெஞ்சுப் புரட்சிக்குப்பிறகு எழுச்சியடைந்த உளகளாவிய இந்த ஊழிய முயற்சிகள் எதிர்பாராமல் உண்டாகவில்லை. தேவ வார்த்தை ஜீவனுள்ளது; அது 'மரித்தது' போலக் காணப்பட்டாலும், விசுவாசிகளின் இருதயங்களில் உயிரோடு இருந்தது; வெளிப்படுத்தலின் தீர்க்கதரிசனங்கள் முன்னுரைத்ததுபோல முழு ஜீவனோடு மீண்டும் எழும்பவிருந்தது. 'நாத்திகவாதியான வால்டர், ஒரு சமயம் இப்படியாகப் பெருமையடித்தான்: ''அந்தப் பன்னிருவர்தாம் கிறிஸ்தவ மதத்தை ஸ்தாபித்ததாக மக்கள் திரும்பத்திரும்பக் கூறுவதைக் கேட்டு களைத்துப்போனேன். அதைக் கவிழ்க்க ஒரு மனிதன் போதுமென்பதை நிரூபிப்பேன்''. அவன் மரித்து பல தலைமுறை கடந்துவிட்டது. வேதாகமத்திற்கு எதிரான போரில் லட்சக்கணக்கானவர்கள் இணைந்திருக்கிறார்கள். ஆனால் அது இன்னும் அழிக்கப்படவில்லை. வால்டரின் காலத்தில் நூறாக இருந்தது, இன்று பத்தாயிரமாக, ஆம், லட்சக்கணக்கான பிரதிகளாக வேதாகமம் பெருகியுள்ளது. கிறிஸ்தவச் சபையைப்பற்றி ஆரம்பக்காலச் சீர்திருத்தவாதி ஒருவர் இப்படிக்கூறினார்: ''வேதாகமம் ஒரு பட்டறைக்கல்; அநேக சம்மட்டிகளை அது உடைத்துள்ளது.'

**வேதாகமம்பற்றியும், அதை நாம் நம்பலாம் என்பதற்கான காரணம்பற்றியும் சங் 119:89; சங் 111:7,8 என்ன சொல்கின்றன?**

தேவவார்த்தை தாக்கப்பட்டிருக்கலாம்; ஒடுக்கப்பட்டிருக்கலாம்; ஆனால், அதை ஒழிக்கவே முடியாது. கிறிஸ்தவர்களெனச் சொல்லிக்கொள்கிற பலர்கூட பல்வேறு வழிகளில் அதன் அதிகாரத்தை குறைத்து மதிப்பிடுகிறார்கள்; வேதாகமத்தின் சில பகுதிகளில் கேள்வி எழுப்புகிறார்கள்; வேதாகமத்தின் தெய்வீக முத்திரையை அழித்து, தேவனுடைய சத்தியத்தை மதிப்பிழக்கச் செய்யக்கூடிய அளவுக்கு, அதிலுள்ள மனித தன்மைகளை முக்கியப்படுத்துகிறார்கள்.

தேவவார்த்தையின் மீதான இத்தாக்குதல்களால் நாம் எந்த வகையிலும் ஈர்க்கப்பட இடமளிக்கக்கூடாது. அது இன்றும் ஜீவிக்கிறது; மனிதர்களின் உள்ளங்களில் பேசுகிறது; தேவவார்த்தையைக் கேட்டு, அதன் போதனைகளைக் கைக்கொள்ள ஆயத்தமாக இருப்பவர்களுக்குள் புதிய சுவாசத்தைச் செலுத்துகிறது.

---

**எந்தத் தீர்க்கதரிசனங்கள் தனிப்பட்ட விதத்தில் மிகவும் வல்லமையாக உங்களிடம் பேசுகின்றன? ஏன்?**

# வெல்லுகிற சத்தியம்

எதிரியின் தாக்குதல்களுக்குமத்தியில், பூமியில் நடைபெறுகிற தேவ பணி மகிமையான வகையில் முடிவடையும். ‘சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும்’ சுவிசேஷம் அறிவிக்கப்படும். வெளி 14:6. நரகத்தின் வல்லமைகளை கிறிஸ்து முற்றிலும் தோற்கடிப்பதோடு கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் இடையே நடக்கிற மாபெரும் போராட்டம் முடிவடையும். தீமைக்கு எதிராக தேவ ராஜ்யம் வெற்றிபெறும்; பிரபஞ்சத்திலிருந்து பாவம் நிரந்தமாக துடைத்தழிக்கப்படும். கிறிஸ்தவ விசுவாசத்தையும் தேவன்மேலிருந்த நம்பிக்கையையும் பிரெஞ்சுப் புரட்சியின்மூலம் அழிப்பதற்கு சாத்தான் எடுத்த முயற்சியோடு வெளி 11 தொடங்குகிறது; ஆனால், அந்த அதிகாரம் முடியும்போது, துரைத்தனங்களுக்கும் தீமையின் வல்லமைகளுக்கும் மேலாக தேவனுடைய ராஜ்யம் வெற்றிபெறுகிறது. கிறிஸ்துவுக்காகவும், அவரது சத்தியத்தின் நோக்கத்திற்காகவும் கொடிய சோதனைகளைச் சந்திக்கிற அனைவருக்கும் அது தைரியமளிக்கிறது.

**காலத்தின் முடிவில் ஏழாம் எக்காளம் தொனிக்கும்போது, என்ன நிகழ்வதாக வெளி 11:15-18 சொல்லுகிறது?**

உலகத்தின் ராஜ்யங்கள் நம் கர்த்தருடைய ராஜ்யங்களாயின. கிறிஸ்து வெற்றிபெறுகிறார்; தீமை தோற்கடிக்கப்படுகிறது. இயேசு ஜெயிக்கிறார்; சாத்தான் தோற்கிறான். நீதி வெற்றிபெறுகிறது; சத்தியம் அரசாளுகிறது. பின்வரும் ஆலோசனைக்கு நாம் செவிகொடுத்தால் நல்லது: ‘மனித அதிகாரத்தின்மேல் கட்டப்படுகிற எதுவும் அகற்றப்படும்; மாறாத தேவ வார்த்தை எனும் கற்பாறையின்மேல் ஸ்தாபிக்கப்படுவது என்றென்றும் நிற்கும்’[1]

**ஆலயத்தில் எது திறக்கப்பட்டதாக யோவான் காண்கிறார்? வெளி 11:19. பரலோகத்தை நோக்கிப் பார்த்தபோது, அங்கே என்ன பார்த்தார்?**

பரலோகத்திலுள்ள தேவனுடைய ஆலயம் யோவானுக்குக் காட்டப்பட்டது. மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் அவர் பார்த்தபோது, அங்கே உடன்படிக்கை பெட்டி இருந்தது. பரலோகத்திலுள்ள மகத்தான அசலின்படி அமைக்கப்பட்ட பழைய ஏற்பாட்டு ஆசரிப்புக்கூடாரத்தில், உடன்படிக்கை பெட்டிக்கு மேலிருந்த இரண்டு தூதர்களுடைய உருவங்களின் நடுவே தேவனுடைய மகிமையான பிரசன்னம் வெளிப்பட்டது. அந்த உடன்படிக்கை பெட்டிக்குள்ளாக தேவனுடைய பிரமாணம் இருந்தது. நாம் விசுவாசத்தின்மூலம் கிருபையால்மட்டுமே இரட்சிக்கப்பட்டாலும், நம் விசுவாசம் மெய்யானதுதானா என்பதை பிரமாணத்திற்கு நாம் கீழ்ப்படிவது காட்டுகிறது. தேவனுடைய பிரமாணம்தான் நியாயத்தீர்ப்பின் அடிப்படை அல்லது அளவுகோல். யாக் 2:12. காலத்தின் முடிவில் இந்த உண்மை மிகவும் முக்கியமானதாக, பொருத்தமானதாக மாறுகிறது. வெளி 12:17; வெளி 14:12.

[1] Ellen G. White, The Great Controversy, p. 288.

---

**பிரெஞ்சுப் புரட்சியின் தேவபக்தியற்ற தன்மைக்கும், வெளி 11 சித்திரிக்கிற மகிமையான முடிவுக்கும் இடையேயுள்ள வித்தியாசம் எவ்வாறு இன்று நம்மிடம் பேசுகிறது?**

# மேலும் படிக்க:

'மத அதிகாரிகளும் தேச அதிகாரிகளும் வேதாகமத்தைத் தடைசெய்தார்கள்; அதன் சாட்சியைப் புரட்டினார்கள்; அதிலிருந்து மக்களின் மனதைத் திருப்புவதற்கான வழியைக் காண மனிதர்களும் பிசாசுகளும் முயன்றார்கள்; அதன் பரிசுத்த நியதிகளை அறிவிக்கத் துணிவுகொண்டவர்களை வேட்டையாடினார்கள்; காட்டிக்கொடுத்தார்கள்; சித்திர வதைசெய்தார்கள்; நிலவறைகளில் அடைத்தார்கள்; விசுவாசத்தின்நிமித்தம் கொல்லப் பட்டார்கள்; மலைகளின் மறைவிடங்களுக்கும் பூமியின் குகைகளுக்கும் கெபிகளுக்கும் தப்பியோட நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இப்படிப்பட்ட காலங்களில் உண்மையுள்ள சாட்சிகள் இரட்டு வஸ்திரமுடுத்தி தீர்க்கதரிசனம் சொன்னார்கள். 1260 வருட காலக்கட்டம் முழுவதிலும்தங்கள்சாட்சியைஅவர்கள்தொடர்ந்துசொல்லிவந்தார்கள்.இருண்டகாலங்களிலும்கூட, தேவவார்த்தையைநேசித்தவர்கள் இருந்தார்கள்; அவருக்கு கனமுண்டாக்குவதில் வைராக்கியமாயிருந்த உண்மையுள்ளவர்கள் இருந்தார்கள். அக்காலக்கட்டம் முழுவதிலும் அவருடைய சத்தியத்தை அறிவிக்கும்படி, மெய்ப்பற்றுக்கொண்ட அத்தாசர்களுக்கு ஞானமும் வல்லமையும் அதிகாரமும் கொடுக்கப்பட்டன.'

'பிரான்ஸ் நாடு பகிரங்கமாக தேவனைப் புறக்கணித்து, வேதாகமத்தைத் தடைசெய்த போது, துன்மார்க்கர்களும் அந்தகார ஆவிகளும் தாங்கள் இதுவரை வாஞ்சித்த நோக்கத்தை அடைந்துவிட்டதாக பெரிதும் மகிழ்ந்தார்கள்; அதாவது, தேவபிரமாணத்தின் கட்டுப்பாடுகளுக்கு உட்படாத ஒரு இராஜ்யத்தைப் பெறுவதுதான் அவர்களுடைய நோக்கம். சாத்தானின் கொடூர வல்லமையைத் தடுத்துநிறுத்தியிருந்த தேவ ஆவி பெருமளவில் ஒதுக்கப் பட்டபோது, மனிதரின் நிர்பந்த நிலையில்மாத்திரம் மகிழ்ச்சியடைகிறவன் தன் விருப்பப்படி செயல்பட அனுமதிக்கப்பட்டான். கலகத்தைத் தெரிந்துகொண்டவர்கள், எழுதுகோலால் எழுதமுடியாத அளவிற்குப் பயங்கர குற்றங்களால் அத்தேசம் நிரம்பும்வரை அதன் பலனை அறுவடைசெய்ய விடப்பட்டார்கள். பாழாக்கப்பட்ட மாகாணங்களிலும், அழிந்துபோன நகரங்களிலுமிருந்து பயங்கர அலறல் கேட்டது; மிகக்கசப்பான வியாகுலத்தின் அழுகுரல் கேட்டது. பூமியதிர்ச்சி உண்டானதுபோல், பிரான்ஸ் அசைக்கப்பட்டது'

## கலந்துரையாடக் கேள்விகள்

1. *மாபெரும் போராட்டத்தின் நியதிகள் எவ்வாறு பிரெஞ்சுப் புரட்சியில் வெளிப் பட்டன?*

2. *தேவன் இல்லையென்று வாதிட்ட ஒருவர் இவ்வாறு சொன்னார்: 'நம் சொந்த இலட் சியங்களின்படி செய்யவும், தடைசெய்யப்பட்ட பகுதி என்கிற அடையாளமே இல் லாத அறிவுரீதியான எந்த எல்லைகளையும் கடந்துசெல்லவும் நமக்கு சுதந்திரம் இருக் கிறது'. 'தடைசெய்யப்பட்ட பகுதி என்கிற எந்த அடையாளமுமே இல்லாத' என்கிற எண்ணம் எவ்வாறு பலர் தேவனைப் புறக்கணிப்பதற்கு ஊக்கமாக இருந்திருக்கிறது? பிரஞ்சுப் புரட்சியின்போது நிகழ்ந்த சிலவற்றைப் புரிந்துகொள்ள இந்தக் கருத்துகள் எவ்வாறு உதவக்கூடும்?*

3. *இறுதி நிகழ்வு சம்பந்தப்பட்டதும், ஆசரிப்புக்கூடாரம் பற்றியதுமாக யோவான் கண்ட தீர்க்கதரிசனத்தின் முக்கியத்துவம் என்ன?*

# ஒரு தூதன், நான்கு சந்திப்புகள்

**நெல்சன் சிங்கோ ரெய்ஸ் சிட்டாங்கோ, கேலவட்டெ ஸபோனெட்டே ஓசிஃபோ**

தூதர்களைச் சந்தித்த அனுபவம் சிலருக்கு இருக்கும். ஓயெலெ என்பவர் ஒருமுறை அல்ல, நான்கு முறை தான் தூதனைப் பார்த்ததாகச் சொல்லுகிறார்.

ஓயெலெ மூன்று வருடங்கள் வீட்டிலிருந்து வெகுதூரத்தில் வேலைசெய்து வந்தார்; அப்போது தன் சிறுவயது விசுவாசத்தை மறந்து வாழ்ந்தார். அந்தச் சமயத்தில், மொசம்பிக் கில் மொகுபா மற்றும் நம்புலா நகரங்களுக்கு இடையே 250 மைலுக்கு (400 கி.மீ) சாலை அமைக்கிற பணி நடைபெற்று வந்தது. அது கடினமான வேலை; எனவே, அதிலிருந்து நிவாரணம் பெறுவதற்கு, தேவப்பிரமாணத்தை மீறுகிற வகையிலான காரியங்களில் ஈடுபட்டார்.

ஒருநாள் வேலை முடிந்து ஓயெலே நன்றாகக் குடித்திருந்தான்; அப்போது அங்கு வந்த புதியவர்கள் சிலர், வாரத்தின் ஏழாம் நாள்தான் ஓய்வுநாள் என்று தெரியுமாவென அவனிடம் கேட்டார்கள். “அதை வேதாகமத்திலிருந்து எனக்கு நிரூபியுங்கள்” என்று சொன்னான்.

வந்திருந்தவர்கள் செவந்த்–டே அட் வெண்டிஸ்ட் கிறிஸ்தவர்கள். நான்காம் கற்பனையிலிருந்து, ‘ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக’ என்று வாசித்தார்கள்; பிறகு, எசே 20:20 இலிருந்து, ‘என் ஓய்வுநாட்களைப் பரிசுத்தமாக்குங்கள்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று நீங்கள் அறியும்படிக்கு அவைகள் எனக்கும் உங்களுக்கும் அடையாளமாயிருக்கும்’ என்று வாசித்தார்கள்.

ஓயெலெ சிறுவயதிலிருந்தே ஆலயத்திற்குச் சென்றிருந்தாலும்கூட, அந்த வசனங்களை அதற்குமுன் வாசித்ததில்லை. அதுபற்றி யோசித்து, ஜெபித்தபோது, இரவில் அவன் தங்கியிருந்த வீட்டிற்கு மேல் பிரகாசமுள்ள ஒரு தூதன் தோன்றினான். “பெலப்படு, நீ சரியான பாதையில் இருக்கிறாய்” என்று சொன்னான். அடுத்த நாள் இரவிலும் அதே இடத்தில் தூதனைக் கண்டான். “பெலப்படு, நீ சரியான பாதையில் இருக்கிறாய்” என்று சொன்னான். மூன்றாவது நாள் இரவிலும் அதே காட்சி தெரிந்தது. அதற்கு அடுத்த ஓய்வுநாளில் ஓயெலே அட்வெண்டிஸ்ட் சபைக்குச் சென்றான். அதன்பிறகு அட்வெண்டிஸ்டுகளோடு தொடர்ந்து ஆராதனை செய்துவந்தான்.

மூன்று வருட பணி ஒப்பந்தம் முடிந்த பிறகு, ஓயெலே வீடு திரும்பினான். அவனுடைய மனைவியும் பிள்ளைகளும் அட்வெண்டிஸ்ட் சபையில் சேர்ந்திருந்தார்கள்; அது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவர்களை விட்டுப் பிரிந்திருந்த நாட்களில், அவர்களோடு தொடர்பில்லாமல் இருந்தான். ஓயெலேயும் அட்வெண்டிஸ்ட் சபையில் சேர்ந்ததுபற்றித் தெரிந்ததும் அவரது மனைவி, ‘இது எதேச்சையாகவா நடந்திருக்கும்?’ என்று வியப்போடு கேட்டார். வீட்டிற்கு வந்தபிறகு, சனிக்கிழமைகளில் அட்வெண்டிஸ்ட் சபைக்கும், ஞாயிற்றுக் கிழமைகளில் தான் சிறுவயதில் சென்ற சபைக்கும் ஓயெலே சென்றார். தூதன் நான்காவது முறை தரிசனமானான். “நீ இப்போது அறிந்துகொண்டதுதான் உண்மை” என்று சொன்னான். செவந்த்–டே அட்வெண்டிஸ்ட் கிறிஸ்தவனாக மாறத் தீர்மானித்தான்.

ஓயெலே வாழ்கிற பகுதியில் ஒரு சில அட்வெண்டிஸ்டுகளே உள்ளனர். “குடிகாரர்களுக்கும் சுவிசேஷம் சொல்லவேண்டும். தேவனே மனமாற்றுகிறவர். சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்கிற வகையில் அநேகரை தேவன் ஆயத்தம் செய்திருக்கிறார். அவர்களை நீங்கள் தொட்டால் மட்டும் போதும்” என்று சொன்னார்.